# <u>மணப்பாறை நகராட்சி</u>

**2019 – ஆம் ஆண்டு ஜனவரி மாதம் ( 24.01. 2019) 24 –ஆம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு நகர்மன்ற அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரணக் கூட்ட நடவடிக்கைகள்**

<table>
<tr><th>மன்ற கூட்டம் நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப் பொருள்</th><th>தீர்மானம்</th></tr>
<tr><td>24.01.2019</td><td>
பொருள் – 1<br>
இந்நகராட்சிக்குட்பட்ட பகுயில் (Swachh Bharat Mission) திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நுண்ணிய குப்பை மையம் அமைக்கும் பணிகள் மேற்கொள்ள வார்டு எண்.11 அண்ணாநகரில் அமைப்பதற்கும் இந்நகராட்சிக்கு இலகுரக வாகனம் (LCV) பேட்டரி வாகனம் (BOV) ஆகியவை வாங்குவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்ளின் கடிதம் ந.க.எண்.1191/2019/P3 நாள்.21.01.2019 வாயிலாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.
<table>
<tr><th>Sl.No</th><th>Nature of Work</th><th>Name of Work</th><th>Estimate Amount (Rs. In Lakh)</th></tr>
<tr><td>1</td><td>Micro Compost Centre</td><td>Construction of MCC with a capacity of 5 TPD at annanagar nearpark at ward No.11</td><td>65.00</td></tr>
<tr><td>2</td><td rowspan="2">Procurement of primary collection Vechicles</td><td>Purchase of Battery Operated Vechile as per specification (22 Nos)</td><td>39.60</td></tr>
<tr><td>3</td><td>Purchase of Light Commercial vehicles 2cu.m capacity as per specification (4Nos)</td><td>22.40</td></tr>
</table>
மேற்படி நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளதில் நுண்ணிய குப்பை மையம் அமைக்கும் பணி(MCC) மேற்கொள்ள மதிப்பீடு ரூ.65.00 லட்சத்திற்கு வழஙகப்பட்டுள்ளது. மேற்படி பணி அண்ணாநகரில் அமைப்பதற்கு அந்த பகுதி பொது மக்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளதால் அதே பணியை இந்நகராட்சிக்குட்பட்ட சந்தை பகுதியில் மேற்கொள்வதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டிற்கு தொழில்நுட்ப அனுமதி பெறுவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
அனுமதிக்கலாம்
</td><td>தீர்மான எண். 479<br>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

24.01.2019

**பொருள் – 2**

மணப்பாறை நகராட்சிக்கு சொந்தமான நாளங்காடி கட்டண கழிப்பிடம் குளியலறையில் கட்டணம் வசூல் செய்து கொள்ளுதல் உரிமத்திற்கு 2018 –2021 மூன்றாண்டுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அழைப்புகள் 22.01.2019 அன்று நடத்தப்பட்டது.

மேற்படி குத்தகை உரிம இனத்திற்க்கான பொது ஏல உயர்ந்தபட்ச கேள்வித்தொகை மற்றும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் உயர்ந்தபட்ச கேள்வித்தொகை கீழ்குறிப்பிடப்பட்டவாறு வரப்பெற்றுள்ளது.

**பொது ஏலத்தில் கலந்துகொண்டவர்கள் மற்றும் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வித்தொகை விபரம்**

| வ.எண் | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி பெயர் / முகவரி | உயர்ந்தபட்ச ஏல கேள்வித்தொகை |
|---|---|---|
| பொது ஏலத்தில் கலந்துகொள்ள யாரும் முன்வரவில்லை. | | |

**வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விபரம்**

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி பெயர் / முகவரி | உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | திரு.எஸ்.முருகன், 10, காளியம்மன் கோவில் தெரு, மேட்டுப்பட்டி, திண்டுக்கல். | ரூ.1,85,000/– |
| 2 | திரு.எஸ்.ரெங்கராஜ், 10, காளியம்மன் கோவில் தெரு, மேட்டுப்பட்டி, திண்டுக்கல். | ரூ.1,20,000/– |

புதிய பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிம இனத்திற்கு பொது ஏலத்தில் ஏலம் கோர முன்வரவில்லை.

ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் திரு.எஸ்.முருகன், 10, காளியம்மன் கோவில் தெரு, மேட்டுப்பட்டி, திண்டுக்கல். என்பவர் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச கேள்வியாக ரூ.1,85,000/– குறிப்பிட்டுள்ளார்.

மேற்படி உரிம இனத்தில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்களில் அதிகபட்சமான உரிமத்தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எஸ்.முருகன், 10, காளியம்மன் கோவில் தெரு, மேட்டுப்பட்டி, திண்டுக்கல் அவர்களுக்கு, அரசாணை (நிலை) எண்.181. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.09.2008–ன்படி ஒப்படைக்கவும், முதல் வருட குத்தகை தொகையாக ரூ.1,85,000/–ல், 01.02.2019 முதல் 31.03.2019 ஆகிய இரண்டு மாதங்களுக்குரிய குத்தகை தெகையினை பெற்றுக்கொள்ளவும், ரூ.1,85,000/–ல் குத்தகை தொகையுடன் சேர்த்து இரண்டாம் ஆண்டிற்கு 5% உயர்வு செய்தும், மூன்றாம் ஆண்டிற்கு இரண்டாம் ஆண்டு குத்தகை தொகையுடன் 5% உயர்வு செய்தும் கேட்பாக நிர்ணயம் செய்து ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. மேற்படி ஏல இனம் 8 முறை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கொண்டுவரப்பட்டு யாரும் ஏலம் எடுக்க

**தீர்மான எண். 480**
**அனுமதிக்கப்பட்டது.**

<table>
<tr>
<td></td>
<td>முன்வராத நிலையில் துறை மூலமாகவே வசூல் செய்யப்பட்டு வருகிறது.<br>
2. துறை வசூலுக்கென மாற்றுப்பணி அடிப்படையில் ஒரு துப்புரவு பணி மேற்பார்வையாளர், இரண்டு துப்புரவு பணியாளரை நியமிக்கப்பட்டுள்ளது. அப்பணியாளர்களின் வரி வசூல் பணி மற்றும் துப்புரவு பணிகள் பாதிப்படைவதுடன் தனியருக்கான ஊதியம் மற்றும் இதர செலவு ஆகியவற்றை கணக்கிடும் போது வரவினத்திற்கு அதிகமாக செலவு ஏற்படுகிறது. இவ்வினம் மூலம் நகராட்சிக்கு நிறைவடையக்கூடிய வருமானம் இல்லை.<br>
3.நாளங்காடி கட்டண கழிப்பிடம் தண்ணீர் இல்லாத காரணத்தினால் துறை மூலம் வசூல் செய்யப்பட்டு வரும் பணி தற்போது நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.<br>
4.மேற்குறிப்பிடப்பட்ட காரணங்களின் அடிப்படையிலும், ஒப்பந்தப்புள்ளி தொகை அதிகபட்சமாக இருப்பதால் ஒப்புதல் வழங்கலாம்.<br>
(ந.க.எண்.025/2018/அ2)</td>
<td></td>
</tr>
<tr>
<td>24.01.2019</td>
<td>பொருள் – 3<br>
மணப்பாறை நகராட்சிக்கு சொந்தமான புதிய பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளுதல் உரிமத்திற்கு 2018 – 2021 மூன்றாண்டுக்கான பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி அழைப்புகள் 22.01.2019 அன்று நடத்தப்பட்டது.<br>
மேற்படி குத்தகை உரிம இனத்திற்க்கான பொது ஏல உயர்ந்தபட்ச கேள்வித்தொகை மற்றும் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் உயர்ந்தபட்ச கேள்வித்தொகை கீழ்குறிப்பிடப்பட்டவாறு வரப்பெற்றுள்ளது.<br>
<u>பொது ஏலத்தில் கலந்துகொண்டவர்கள் மற்றும் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வித்தொகை விபரம்</u>
<table>
<tr><th>வ.எண்</th><th>ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி பெயர் / முகவரி</th><th>உயர்ந்தபட்ச ஏல கேள்வித்தொகை</th></tr>
<tr><td>1</td><td>திரு.எஸ்.முருகன், 10, காளியம்மன் கோவில் தெரு, மேட்டுப்பட்டி, திண்டுக்கல்.</td><td>ஏலம் கோர முன்வரவில்லை.</td></tr>
</table>
<u>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி பெயர் / முகவரி</th><th>உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை</th></tr>
<tr><td>1</td><td>திரு.எஸ்.கலிபுல்லா, 101, ஈதுகா பள்ளிவாசல் தெரு, நாராயண பிள்ளைத் தோட்டம், திண்டுக்கல்.</td><td>ரூ.6,20,000/–</td></tr>
<tr><td>2</td><td>திரு.எஸ்.முருகன், 10, காளியம்மன் கோவில் தெரு, மேட்டுப்பட்டி, திண்டுக்கல்.</td><td>ரூ.7,16,000/–</td></tr>
</table>
புதிய பேருந்து நிலையத்திற்குள் வந்து செல்லும் பேருந்துகளுக்கு கட்டணம் வசூல் செய்து கொள்ளும் உரிம இனத்திற்கு பொது ஏலத்தில் ஏலம் கோர முன்வரவில்லை.</td>
<td>தீர்மான எண். 481<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் திரு.எஸ்.முருகன், 10, காளியம்மன் கோவில் தெரு, மேட்டுப்பட்டி, திண்டுக்கல் என்பவர் ஒப்பந்தப்புள்ளியில் உயர்ந்தபட்ச கேள்வியாக ரூ.7,16,000/— குறிப்பிட்டுள்ளார்.<br>மேற்படி உரிம இனத்தில் பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளியில் கலந்துகொண்டவர்களில் அதிகபட்சமான உரிமத்தொகைக்கு ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.எஸ்.முருகன், 10, காளியம்மன் கோவில் தெரு, மேட்டுப்பட்டி, திண்டுக்கல் அவர்களுக்கு, அரசாணை (நிலை) எண்.181. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.19.09.2008—ன்படி ஒப்படைக்கவும், முதல் வருட குத்தகை தொகையாக ரூ.7,16,000/—ல், 01.02.2019 முதல் 31.03.2019 ஆகிய இரண்டு மாதங்களுக்குரிய குத்தகை தெகையினை பெற்றுக்கொள்ளவும், ரூ.7,16,000/—ல் குத்தகை தொகையுடன் சேர்த்து இரண்டாம் ஆண்டிற்கு 5% உயர்வு செய்தும், மூன்றாம் ஆண்டிற்கு இரண்டாம் ஆண்டு குத்தகை தொகையுடன் 5% உயர்வு செய்தும் கேட்பாக நிர்ணயம் செய்து ஒப்படைப்பு செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>1. மேற்படி ஏல இனம் புதிய பேருந்து நிலையம் கட்டி முடிக்கப்பட்டு இரண்டு ஆண்டுகளுக்கு மேலான நிலையில் 11 முறை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கொண்டுவரப்பட்டு யாரும் ஏலம் எடுக்க முன்வராத நிலையில் துறை மூலமாகவே வசூல் செய்யப்பட்டு வருகிறது.<br>2. துறை வசூலுக்கென மாற்றுப்பணி அடிப்படையில் ஒரு வருவாய் உதவியாளர், ஒரு துப்புரவு பணி மேற்பார்வையாளர், இரண்டு துப்புரவு பணியாளரை நியமிக்கப்பட்டுள்ளது. அப்பணியாளர்களின் வரி வசூல் பணி மற்றும் துப்புரவு பணிகள் பாதிப்படைவதுடன் தனியருக்கான ஊதியம் மற்றும் இதர செலவு ஆகியவற்றை கணக்கிடும் போது வரவினத்திற்கு அதிகமாக செலவு ஏற்படுகிறது. இவ்வினம் மூலம் நகராட்சிக்கு நிறைவடையக்கூடிய வருமானம் இல்லை.<br>3.மேற்குறிப்பிடப்பட்ட காரணங்களின் அடிப்படையிலும், ஒப்பந்தப்புள்ளி தொகை அதிகபட்சமாக இருப்பதால் ஒப்புதல் வழங்கலாம்.<br>(ந.க.எண்.025/2018/அ2) | |
| 24.01.2019 | **பொருள் — 4**<br>இந்நகராட்சிக்கு சொந்தமான நாளங்காடி நுழைவு வாயில் புதிய கடை எண்.2—க்கு 22.01.2019—ம் தேதிய நான்காம் அழைப்பு பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் பொது ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. ஒப்பந்தப்புள்ளி அழைப்பில் கீழ்குறிப்பிடப்பட்டவர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது. | **தீர்மான எண். 482**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

**<u>ஒப்பந்தப்புள்ளி கலந்துகொண்டவர்கள் மற்றும் உயர்ந்தபட்ச ஏலக்கேள்வித்தொகை விபரம்</u>**

| வ.எண் | ஏலதாரர் பெயர் மற்றும் முகவரி பெயர் / முகவரி | உயர்ந்தபட்ச ஏலக் கேள்வித்தொகை |
|---|---|---|
| | பொது ஏலத்தில் எவரும் கலந்துகொள்ளவில்லை | |

<table>
<tr>
<td></td>
<td>
<u>வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளி விபரம்</u>
<table>
<tr><th>வ.எண்</th><th>ஒப்பந்தப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி பெயர் / முகவரி</th><th>உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகை</th></tr>
<tr><td>1</td><td>திரு.எஸ்.சிந்தாமணி, த/பெ.சண்முகசுந்தரம், 14/20, முத்துச்சாமி தெரு, மணப்பாறை</td><td>ரூ.4500/–</td></tr>
<tr><td>2.</td><td>திரு.ஜி.கண்ணன், த/பெ.காந்தி, தவிட்டுப்பட்டி, மணப்பாறை</td><td>ரூ.4100/–</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எஸ்.சிந்தாமணி, த/பெ.சண்முகசுந்தரம், 14/20, முத்துச்சாமி தெரு, மணப்பாறை என்பவரின் ஒரு மாத வாடகையாக ரூ.4500/–க்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளி தொகைக்கு கோரியுள்ளார்.<br>
எனவே உயர்ந்தபட்ச கேள்வித் தொகை கோரியுள்ள திரு.எஸ்.சிந்தாமணி, த/பெ.சண்முகசுந்தரம், 14/20, முத்துச்சாமி தெரு, மணப்பாறை என்பவருக்கு நாளங்காடி நுழைவு வாயில் புதிய கடை எண்.2–ஐ பொது ஏல நிபந்தனைகளின்படி ஒப்படைக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
1. மேற்படி ஏல இனம் 4 முறை பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கொண்டுவரப்பட்டு யாரும் ஏலம் எடுக்க முன்வராத நிலையில் 22.01.2019 அன்றைய தேதியில் ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.<br>
அரசு மதிப்பைவிட கூடுதலான தொகைக்கு ஏலம் கோரியுள்ளதால் திரு.எஸ்.சிந்தாமணி, த/பெ.சண்முகசுந்தரம், 14/20, முத்துச்சாமி தெரு, மணப்பாறை என்பவரின் ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ.4500/– ஏற்க அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.028/2015/அ2)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>24.01.2019</td>
<td>
பொருள் – 5<br>
இந்நகராட்சியில் 2018–19 முதல் 2020 – 2021 மூன்றாண்டு குத்தகை இனங்கள் வருகின்ற 22.01.2019 அன்று மறு பொது ஏலம் மற்றும் மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்ட விபரத்தினை செய்தி மக்கள் தொடர்பு அலுவலரின் ந.க.எண்.3/செ.ம.தோ 2019 நாள்.07.01.2019 தேதிய கடிதத்தின்படி, 08.01.2019 ல் தினத்தந்தி நாளிதழில் விளம்பரம் செய்யப்பட்டதற்கான தொகை ரூ.12,600/–ஐ பிரைட் அட்வர்டைஸ்மெண்ட் நிறுவனத்திற்கு வழங்கவும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>
அலுவலகக்குறிப்பு<br>
மன்றம் அனுமதிக்கலாம்<br>
(ந.க.எண்.025/2018/அ2)
</td>
<td>தீர்மான எண். 483<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>24.01.2019</td>
<td>
பொருள் – 6<br>
சொத்துவரி பொது சீராய்வில் இந்நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் சொத்துவரி விதிப்பில் அ , ஆ, இ –ல் உள்ள மண்டல அடிப்படை மதிப்பின் படியும் சதுர அடி மற்றும் பயன்பாட்டின்
</td>
<td>தீர்மான எண். 484<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | அடிப்படையில் சொத்துவரி விதிக்கப்படுவதில் குறைந்தபட்ச சொத்துவரி விதிப்பு தொகையாக ரூபாய் 150 ஆக நிர்ணயம் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக்குறிப்பு</u>**<br>மன்றம் அனுமதிக்கலாம் | |
| 24.01.2019 | **பொருள் – 7**<br>இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிளில் திட்டப்பணிகள் மற்றும் பொதுநிதியின்கீழ் நடப்பு ஆண்டில் அதிகமாக பணிகள் நடைபெற இருப்பதால் ONLINE E TENDER Upload செய்வதற்கு DSC E TOKEN பெற DIGITAL IDENTITY என்ற நிறுவனத்தில் பெறுவதற்கும் மேலும் இந்நகராட்சியில் பொதுப்பணியாளர் பணியிடம் காலியாக இருப்பதாலும் இந்நகராட்சி பணி ஆய்வாளருக்கு DSC E TOKEN வாஙகுவதற்கும் ஆக மொத்தம் பணி ஆய்வர், ஆணையர் ஆகியோருக்கு **2**எண்ணிக்கை E Token வாஙகுவதற்கு ரூ.**5200/–** இதனை பொதுநிதியில் தொகை வழஙகுவதற்கும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 485**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 24.01.2019 | **பொருள் – 8**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட மதுரைரோட்டிலிருந்து திருச்சிரோடு சர்ச்வரை சென்டர்மீடியாவில் உள்ள தெருவிளக்குகள் பழுது ஏற்பட்டுள்ளதை சரிசெய்யும் பணி மேற்கொள்ள தயார்செய்யப்பட்ட மதிப்பீடு ரூ**1.60** லட்சம் பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 486**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 24.01.2019 | **பொருள் – 9**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வாகைக்குளம்ரோடு சிமெண்ட்சாலை அமைக்கும்பணி மேற்கொள்ள தயார்செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.**9.90** லட்சம் பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 487**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 24.01.2019 | **பொருள் – 10**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட ராமலிங்கம்தெருவில் சிமெண்ட்சாலை அமைக்கும்பணி மேற்கொள்ள தயார்செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.**9.90** லட்சம் பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 488**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 24.01.2019 | **பொருள் – 11**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10ல் ஆழ்துளை கிணறுடன் சிறுமின் விசை பம்பு அமைத்தல் பணி மேற்கொள்ள தயார்செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.25 லட்சம் குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 489 அனுமதிக்கப்பட்டது.** |
| 24.01.2019 | **பொருள் – 12**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.4 பொத்தமேட்டுப்பட்டியில் உப்புதண்ணீர் பகிர்மானக்குழாய் பராமரிப்பு பணி மேற்கொள்ள தயார்செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.3.30 லட்சம் குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 490 அனுமதிக்கப்பட்டது.** |
| 24.01.2019 | **பொருள் – 13**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11 விராலிமலைமெயின்ரோடு, அண்ணாநகர் பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணி மேற்கொள்ள தயார்செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9.80 லட்சம் பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 491 அனுமதிக்கப்பட்டது.** |
| 24.01.2019 | **பொருள் – 14**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24 வெள்ளக்கல் வீராட்சி தெற்குதெரு பகுதியில் மழைநீர் வடிகால் கட்டும் பணி மேற்கொள்ள தயார்செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9.77 லட்சம் பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 492 அனுமதிக்கப்பட்டது.** |
| 24.01.2019 | **பொருள் – 15**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்கள்.14,17,18 மற்றும் 20 ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் கட்டும் பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட மதிப்பீடு ரூ9.75 லட்சம் பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 493 அனுமதிக்கப்பட்டது.** |

| | | |
|---|---|---|
| 24.01.2019 | **பொருள் – 16**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.6 அண்ணாவி நகர், வார்டு எண்.7 குறுக்குத்தெருவில் மழைநீர் வடிகால் கட்டும் பணி மேற்கொள்ள தயார்செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9.90 லட்சம் பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 494**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 24.01.2019 | **பொருள் – 17**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.24 வெள்ளக்கல் மெயின்ரோடு (காந்திசாலை) பகுதியில் பகிர்மான குழாய் அமைக்கும்பணி மேற்கொள்ள தயார்செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.7.10 லட்சம் குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 495**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 24.01.2019 | **பொருள் – 18**<br>மணப்பாறை நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் ஆழ்துளை கிணறுடன் சிறுமின் விசை பம்பு சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் பணி மேற்கொள்ள தயார்செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.50 லட்சம் குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம். | **தீர்மான எண். 496**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 24.01.2019 | **பொருள் – 19**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.18ல் ஆழ்துளை கிணறுடன் சிறுமின் விசை பம்பு சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் பணி மேற்கொள்ள தயார்செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.4.00 லட்சம் குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 497**<br>**அனுமதிக்கப்பட்டது.** |
| 24.01.2019 | **பொருள் – 20**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்கள்.14,19,22ல் ஆழ்துளை கிணறுடன் சிறுமின் விசை பம்பு சின்டெக்ஸ் டேங்க் அமைத்தல் பணி மேற்கொள்ள தயார்செய்யப்பட்ட மதிப்பீடு ரூ9.75 லட்சம் குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு</u>**<br>அனுமதிக்கலாம் | **தீர்மான எண். 498**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

24.01.2019

**பொருள் – 21**

இந்நகராட்சியில் வருவாய் பிரிவில் போதிய பணியாளர்கள் இல்லாததால் சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் ஆகியவற்றை வசூல் செய்ய சிரமமான சூழ்நிலை ஏற்படுவதால் ஆட்டோ மூலம் விளம்பரம் செய்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வாடகை ஆட்டோ மூலம் விளம்பரம் செய்யவும் அதற்காகும் செலவினத்திற்கும், மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் பணியின் அவசியம் கருதி விலைப்புள்ளி பெறப்பட்டதில் கீழ்க்கண்டவாறு வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பெயர் | விலைப்புள்ளியில் கொடுக்கப்பட்டுள்ள தொகை (நாள் ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1 | திரு.ஜான்பீட்டர், திருச்சி ராடு, மணப்பாறை | ரூ.1500/– |
| 2 | திரு.பி.குமணன், 13/195, சபரிநிவாஸ், பொத்தமேட்டுப்பட்டி, மணப்பாறை | ரூ.1400/– |
| 3 | திரு.கே.பாலாஜி, வாகைக்குளம் ரோடு, மணப்பாறை | ரூ.1600/– |

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. வரப்பெற்ற முன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்த திரு.பி.குமணன் பொத்தமேட்டுப்பட்டி, மணப்பாறை என்பவரின் விலைப்புள்ளியை ஏற்கலாம்.
3. பிப்ரவரி 2019 முதல் மார்ச் 2019 வரை தேவைப்படும் காலங்களுக்கு பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கலாம்
4. செலவினத் தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**தீர்மான எண். 499**
**அனுமதிக்கப்பட்டது.**

---

24.01.2019

**பொருள் – 22**

மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்கள்.20 மணப்பாறைப்பட்டியில் ஆழ்துளை கிணறுடன் சிறுமின் விசை பம்பு அமைத்தல் பணி மேற்கொள்ள தயார்செய்யப்பட்ட மதிப்பீடு ரூ3.25 லட்சம் குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதிக்கலாம்

**தீர்மான எண். 500**
**அனுமதிக்கப்பட்டது.**

---

24.01.2019

**பொருள் – 23**

மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட மதுரைரோடு மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி பராமரிப்பு பணி மேற்கொள்ள தயார்செய்யப்பட்ட மதிப்பீடு ரூ. 9.80 லட்சம் குடிநீர் நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலக குறிப்பு</u>**

அனுமதிக்கலாம்

**தீர்மான எண். 501**
**அனுமதிக்கப்பட்டது.**

<table>
<tr>
<td>24.01.2019</td>
<td>பொருள் – 24<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட வாகைக்குளம்ரோடு விடுபட்ட பகுதிகளில் சிமெண்ட்சாலை அமைக்கும்பணி மேற்கொள்ள தயார்செய்யப்பட்ட மதிப்பீடு ரூ.9.90 லட்சம் பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>அனுமதிக்கலாம்</td>
<td>தீர்மான எண். 502<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>24.01.2019</td>
<td>பொருள் – 25<br>இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வார்டு எண்.1 முதல் 27வரை உ உளள சிறுமின்விசை பம்பு மற்றும் இந்தியா மார்க் II அடிபம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் பணி 2018–2019 ஆம் ஆண்டு குடிநீர் நிதியின்கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கு 23.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டபடி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் மீது ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்
<table>
<tr><th>வ. எண்</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீட்டு தொகை</th><th>ஒப்பந்தாரரின் பெயர்</th><th>விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td rowspan="2">வார்டு எண்.1 முதல் 27வரை உள்ள சிறுமின்விசை பம்பு மற்றும் இந்தியா மார்க் II அடிபம்புகளில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் பணி</td><td rowspan="2">4,50,000/–</td><td>திரு.A.அருள்சவுந்தர்ராஜ்</td><td>–6.16% மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>திரு.எஸ்.சண்முகம்</td><td>–0.07% மதிப்பீட்டு விலைவிகிதத்தை விட குறைவு</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் திரு.எஸ்.சண்முகம் என்பவர் –0.07% மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிடவும் மற்ற ஒப்பந்தபுள்ளியைவிடவும் குறைவாக கொடுத்துள்ளார். எனவே இந்த குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழஙகியதையும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு</u><br>அனுமதிக்கலாம்</td>
<td>தீர்மான எண். 503<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>24.01.2019</td>
<td>பொருள் – 26<br>இந்நகராட்சி பொது சுகாதார லாரிகள் TN45Az 2257, TAX 2402, TDY 1660 ஆகிய வாகனங்களுக்கு இந்தாண்டு செலுத்திட வேண்டிய வாகன காப்பீடு தொகை செலுத்திடவும் மற்றும் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் செலுத்தப்பட வேண்டிய சாலைவரி, சேவை வரி, பசுமை வரி, தகுதிச்சான்று கட்டணங்கள் செலுத்திடவும் அதற்கான தோராய செலவினம் ரூ.1.5 லட்சம் பொது நிதியிலிருந்து செலவிடவும் கூட்டப்பொருள் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு–</u> அனுமதிக்கலாம். (ந.க.எண்.104/2019/எச்1)</td>
<td>தீர்மான எண். 504<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

24.01.2019

**பொருள் – 27**

தமிழ்நாடு சட்ட மன்ற பேரவையில் 2018–19 –ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை எண்.34, அறிவிப்பு எண்.14–ல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக்குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic vending centre) நிறுவ ஒப்பந்தப்புள்ளி கோரியதில் 21.01.2019–ம் தேதிய அழைப்பில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விவரம் | ஒப்பந்தரார் பெயர் | நகராட்சிக்கு செலுத்தும் கட்டணத்தொகை (லிட்டருக்கு) | பொது மக்களிடம் வசூல் செய்யும் தொகை (லிட்டருக்கு) |
|---|---|---|---|---|
| 1. | நகராட்சிகளில உள்ள 27 வார்டுகளில் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக்குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic vending centre) நிறுவுதல் | 1) BMT Associaties, Trichy | 1. 0.10 பைசா / ஒரு லிட்டருக்கு/ AVM சென்டரில் விற்பனை செய்யப்படுவதற்கு<br>2. ரூ. 1.00 / 20 லிட்டருக்கு / AVM சென்டரில் விற்பனை செய்யப்படுவதற்கு<br>3. ரூ. 2.00 / 20 லிட்டருக்கு / வீடுகளில் சப்ளை செய்யப்படுவதற்கு | 1. ரூ. 1.00 / ஒரு லிட்டருக்கு / AVM சென்டரில் விற்பனை செய்யப்படுவதற்கு<br>2. ரூ. 7.00 / 20 லிட்டருக்கு / AVM சென்டரில் விற்பனை செய்யப்படுவதற்கு<br>3. ரூ. 20.00 / 20 லிட்டருக்கு / வீடுகளில் சப்ளை செய்யப்படுவதற்கு |
| 2. | | 2) AVT Enterprises, Pudukottai | 1. 0.10 பைசா / ஒரு லிட்டருக்கு/ AVM சென்டரில் விற்பனை செய்யப்படுவதற்கு<br>2. ரூ. 1.00 / 20 லிட்டருக்கு / AVM சென்டரில் விற்பனை செய்யப்படுவதற்கு<br>3. ரூ. 2.00 / 20 லிட்டருக்கு / வீடுகளில் சப்ளை செய்யப்படுவதற்கு | 1. ரூ. 2.00 / ஒரு லிட்டருக்கு / AVM சென்டரில் விற்பனை செய்யப்படுவதற்கு<br>2. ரூ. 8.00 / 20 லிட்டருக்கு / AVM சென்டரில் விற்பனை செய்யப்படுவதற்கு<br>3. ரூ. 22.00 / 20 லிட்டருக்கு / வீடுகளில் சப்ளை செய்யப்படுவதற்கு |

**அலுவலக குறிப்பு** – குறைந்த ஒப்புந்தப்புள்ளி கொடுத்துள்ள BMT Associaties, Trichy நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை அனுமதிக்கலாம்.

**ந.க.எண். 2419 / இ1 / 2018**

**தீர்மான எண். 505**
**அனுமதிக்கப்பட்டது.**

<table>
<tr>
<td>24.01.2019</td>
<td>

**பொருள் – 28**

மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட திருச்சி– திண்டுக்கல்சாலையில் மேம்பாலம் அருகில் ஆத்துவாரியில் புதிதாக 2–எண்ணிக்கை ஆழ்துளை கிணறுகள் அமைத்து 2–எண்ணிக்கை 10HP மோட்டார் பொருத்துதல் 2018–2019 ஆம் ஆண்டு குடிநீர் நிதியின்கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கு 23.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டபடி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் மீது ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்

<table>
<tr><th>வ. எ ண்</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீட்டு தொகை</th><th>ஒப்பந்தாரரின் பெயர்</th><th>விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td rowspan="2">மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட திருச்சி– திண்டுக்கல்சாலையில் மேம்பாலம் அருகில் ஆத்துவாரியில் புதிதாக 2–எண்ணிக்கை ஆழ்துளை கிணறுகள் அமைத்து 2–எண்ணிக்கை 10HP மோட்டார் பொருத்துதல்</td><td rowspan="2">9,90,000/–</td><td>திரு.எ.அருள்சௌந்தர்ராஜ்</td><td>2.62% மதிப்பீட்டு விலைவிதத்தை விட அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>திரு.எஸ்.சண்முகம்</td><td>–0.07% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு</td></tr>
</table>

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் திரு.எஸ்.சண்முகம் என்பவர் –0.07% மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிடவும் மற்ற ஒப்பந்தபுள்ளியைவிடவும் குறைவாக கொடுத்துள்ளார். எனவே இந்த குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>**அலுவலக குறிப்பு**</u>

அனுமதிக்கலாம்.

</td>
<td>

**தீர்மான எண். 506**
**அனுமதிக்கப்பட்டது.**

</td>
</tr>
<tr>
<td>24.01.2019</td>
<td>

**பொருள் – 29**

இந்நகராட்சிக்குட்பட்ட இந்கராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள வார்டு எண்.1 முதல் 27வரை உள்ள பகிர்மான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் பணி 2018–2019 ஆம் ஆண்டு குடிநீர் நிதியின்கீழ் கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்வதற்கு 23.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரியதில் கீழ்கண்டபடி வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் மீது ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்ததில்

</td>
<td>

**தீர்மான எண். 507**
**அனுமதிக்கப்பட்டது.**

</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.<br>எ<br>ண்</th><th>வேலையின் பெயர்</th><th>மதிப்பீட்டு தொகை</th><th>ஒப்பந்தாரரின் பெயர்</th><th>விலை விகிதம்</th></tr>
<tr><td>1</td><td rowspan="2">வார்டு எண்.1 முதல் 27வரை உள்ள பகிர்மான குழாய்களில் ஏற்படும் பழுதுகளை சரிசெய்யும் பணி</td><td rowspan="2">2,00,000/-</td><td>திரு.எஸ்.சண்முகம்</td><td>3.02% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட அதிகம்</td></tr>
<tr><td>2</td><td>திரு.எ.அருள்சவுந்தர்ராஜ்</td><td>-0.03% மதிப்பீட்டு விலை விகிதத்தை விட குறைவு</td></tr>
</table>
வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளியில் திரு.எ.அருள்சவுந்தர்ராஜ் என்பவர் -0.03% மதிப்பீட்டு விலைவிகிதத்தைவிடவும் மற்ற ஒப்பந்தபுள்ளியைவிடவும் குறைவாக கொடுத்துள்ளார். எனவே இந்த குறைந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் பணியின் அவசர அவசியம் கருதி தனிஅலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழங்கியதையும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
அனுமதிக்கலாம்.
</td>
<td></td>
</tr>
<tr>
<td>24.01.2019</td>
<td>பொருள் - 30<br>
மாவட்ட ஆட்சித்தலைவர் திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் அ9/4321/2018 நாள்.08.01.2019ன் கீழ் மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2018-19 ம்ஆண்டு நிதியின் கீழ் ரூ.20.00 லட்சம் மதிப்பீட்டில் 4எண்ணிக்கை சிறு சமுதாயக்கூடம் அமைக்கும் பணி மேற்கொள்ள கருத்துரு அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
பதிவு செய்யலாம்</td>
<td>தீர்மான எண். 508<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
<tr>
<td>24.01.2019</td>
<td>பொருள் - 31<br>
மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திருச்சி பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2018-19 ம்ஆண்டு நிதியின் கீழ் ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டில் மோர்குளம் தூர்வாரும் பணி மேற்கொள்ள கருத்துரு அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சித்தலைவர் திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் அ9/4321/2018 கீழ் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு</u><br>
பதிவு செய்யலாம்</td>
<td>தீர்மான எண். 509<br>அனுமதிக்கப்பட்டது.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 24.01.2019 | **பொருள் – 32**<br>மணப்பாறை நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கரூர்பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2018–19 ம்ஆண்டு நிதியின் கீழ் கீழ் ரூ.5.00 லட்சம் மதிப்பீட்டில் மோர்குளம் தூர்வாரும் பணி மேற்கொள்ள கருத்துரு அனுப்ப தெரிவிக்கப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சித்தலைவர் திருச்சிராப்பள்ளி அவர்களின் கடிதம் அ9/4321/2018 கீழ் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு**<br>பதிவு செய்யலாம் | **தீர்மான எண். 510**<br>**அனுமதிக்கப்பட்டது.** |

**தனி அலுவலர்**
**மணப்பாறை நகராட்சி**